யாழ்ப்பாண பொது நூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 மாசி 10 ஜ- அல் 30 இதழ் 11
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 21-2-1985

இராமேஸ்வரம் வந்த அகதிகள் கூறினர் ———

## 15 நாளில் வெளியேறுமாறு இராணுவம் பணித்ததாம்!

(சென்னை)

இலங்கையிலிருந்து இராமேஸ்வரம் வந்துசேர்ந்த தமிழ் அகதிகள், 15 நாட்களுக்குள் தம்மை வெளியேறுமாறு இலங்கை ராணுவம் உத்தரவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

பதினைந்து நாட்களுக்குள் வெளியேருதுவிட்டால் கொன்றுவிடுவதாக அவர்கள் மிரட்டியதைத் தொடர்ந்தே தாம்தமிழ்நாட்டுக்கு வந்ததாகவும் அகதிகள்தெரிவித்தனர்.

இதேவேளை அகதிகளின் இக் கூற்றில் உண்மை எதுவுமில்லை என்று புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு. பேனர்ட் திலகரத்ன மறுத்துள்ளார்.

### இலங்கையருக்கு விஸா இல்லை

(பரிஸ்)

இலங்கை உல்லாசப் பயணிகள் பிரான்ஸ் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து உல்லா

(6ம்பக்கம் 3ம் கலம் பார்க்க]

# நேருக்கு நேர் போரிட தீவிரவாதிகள் திட்டம்!

### மீண்டும் தாக்கப்பட்டனர்

(சென்னை)

இந்தியமீனவர்கள் இலங்கை கடற்படையினரால் மீண்டும் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லைக்காடு என்னும் இந்திய கடற்பிரதேசத்தில் நேற்று முன்தினம் இந்த மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்த பொழுது இரும்புக் கம்பிகளால் தாக்கப்பட்டதுடன், மீன்பிடி வலைகளையும், பிடித்த மீன்களையும் பறித்துச்சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இறுதிப் போர் ஒன்றுக்கு தயாராகி வருகிறார்கள்"

### பாராளுமன்றத்தில் ஜனாதிபதி உரை

(இ. கந்தசாமி)

''தாக்கிவிட்டு ஓடிமறைந்து விடும் தந்திரத்தை மாற்றி, நேருக்குநேர் மோதலுக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டுவருகின்றன. இறுதியானதும், தீர்க்கமானதும் என்று தீவிரவாதிகள் நம்பும் போர் ஒன்றுக்கு ஆயத்தங்கள் நடந்துவருகின்றன'' என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்,

பயிற்சி அளிக்கப்பட்டவர்களும் ஆயுதங்களும் வந்துசேர்ந்ததும் தீவிரவாதிகள் நேருக்குநேர் மோதல்களைச் சந்திக்கலாம் என்றும் அவர் கூறினார்.

(6ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

'புளொட்' பிரசுரம் தகவல்———

## கடற்படையினருடன் நடுக்கடலில் மோதல்!

[யாழ்ப்பாணம்]

நடுக்கடலில் தமிழீழமக்கள் விடுதலைக் கழகத்தினருக்கும் [புளொட்] கடற்படையினருக்குமிடையே நடந்த மோதலில், இயக்கத்தைச் சேர்ந்த 5 இளைஞர்கள் பலியானதாக ''புளொட்' வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''மரணம் வாழ்வின் முடி

(5ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

கொள்ளைகளைக் கண்டித்து———

## தெல்லிப்பழை ப. நோ. கூ. ச. இன்றுமுழுநாள்கதவடைப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் அடிக்கடி இடம்பெற்றுவரும் கொள்ளைச் சம்பவங்களைக்கண்டித்து நாளை வெள்ளிக்கிழமை முழுநாளும்

[6-ம் பக்கம் 4-ம்கலம் பார்க்க]

காங்கேசன் கரையில்

## இளைஞர் சடலங்கள்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைக் கடற்கரை ஒரமாக மேலும் சில இளைஞர்களின் சடலங்கள் மிதப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீரிமலைக் கரையோரமாகவுள்ள உயர்ந்த கடல்பாறைகளில் இரு இளைஞர்களின் சடலங்கள் தடைப்பட்டுக்கிடப்பதாகவும் அதற்கப்பால் மிதந்த நிலையில் இருசடலங்கள்காணப்பட்டதாகவும் கரையோர மீனவர்கள் சிலர் தெரிவித்துள்ளார்கள்.

(6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

எம். ஜி. ஆர்.

### இராணுவத்தளபதி சந்திப்பு

[சென்னை]

இந்திய தென் பிராந்திய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ரஞ்சி தயால் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனை நேற்றுக் காலை சந்தித்தார்.

(6ம்- பக்கம் 3-ம் கலம்பார்க்க)

நைஜீரியாவிலிருந்து

## 1000 இலங்கை ஆசிரியர்கள் திருப்பி அனுப்பப்படுவர்!

(லண்டன்)

நைஜீரியாவில் ஆசிரியர்களாக பணிபுரிந்துவரும் சுமார் ஆயிரம் இலங்கையர்களைத் திருப்பி அனுப்ப அந்த நாட்டு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நைஜீரியாவில் பணிபுரியும் வெளிநாட்டு ஆசிரியர்களைத் திருப்பி அனுப்புவதென்று ராணுவ அரசு முடிவு செய்துள்

(5-ம் பக்கம் 3-ம் கலம் பார்க்க)

### இராணுவத்தினரே இவரைச் சுட்டனர்!

(வவனியா)

வவனியாவில் ஜோசேப் யோகராஜா என்ற யாழ் பல்கலைக்கழக மாணவனை தாங்களே சுட்டுக் கொன்றதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவரை கடந்த 18ம் தேதி அழைத்துச் சென்ற இராணு

(6ம் பக்கம் 1ம் கலம் பார்க்க)

## சென்பற்றிக்ஸ் கல்லூரியில் 2 லட்சம் ரூபா கொள்ளை!

### அதிபரும் ஆசிரியரும் கெஞ்சிக் கேட்டும் கொள்ளையர் விடவில்லை

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் விடுதியிலிருந்து துப்பாக்கிமுனையில் சுமார் இரண்டு லட்சம் ரூபா நேற்று முன்தினம் இரவு கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் சம்பளப்பணமான 2 லட்சம் ரூபாவும் பாதுகாப்பாக இருப்புப்பெட்டியில் வைக்கப் பட்டிருந்ததாகவும் விடுதியிலிருந்த அதிபரையும் மற்றும் ஆசிரியர்களையும் பயமுறுத்தி கொள்ளையடித்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேற்படி கல்லூரியின் அதிபராகவும் ஆசிரியர்களாகவும் பணியாற்றும் கத்தோலிக்க குருவானவர்கள் மூவர், கொள்ளை அடிக்கப்பட்ட 2 லட்சம் ரூபாவும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவிருந்த சம்பளப் பணமும், ஏழைப்பிள்ளைகளின்

(5ம் பக்கம் 1ம் கலம் பார்க்க)

### ஒரே நாளில் 1039 அகதிகள்!

[சென்னை]

1039அங்கத்தவர்களைக் கொண்ட 249 குடும்பங்கள் அகதிகளாக நேற்றும் இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் அகதிகளாக ஒரேநாளில் சென்றவர்களில் ஆகக்கூடுதலான எண்ணிக்கை இதுவேயாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. [ரா]

வவனியாவில் நேற்று சம்பவம்———

## ஒருவர் சுட்டுக் கொலை மற்றவர் மர்ம மரணம்!

(வவனியா)

வவனியாவில் நேற்றுக்காலை ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலைசெய்யப்பட்டுள்ளார்.

தாமோதரம்பிள்ளை மனோபாலன் என்ற இந்த நபர் வவனியா பஸ்நிலையத்துக்கு அருகிலுள்ள தேநீர்க்கடையொன்றில் நின்றசமயம் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

இதேவேளை வவனியாவிலுள்ள பிரபல வர்த்தகரான

(6-ம் பககம 1-ம் கலம் பார்க்க)

## சட்டத்தரணிகள் இன்றுமுதல் நீதிமன்றங்களில் ஆஜராவர்!

(கா. யோகநாதன்)

யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் இன்று வியாழக்கிழமை முதல் மீண்டும், நீதிமன்றங்களில் ஆஜராகி வழமைபோல் கடமையாற்றுவதென்று, நேற்றுக்கூடிய யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கங்கள் ஏகமனதாக தீர்மானித்துள்ளன

யாழ். சட்ட நூலகத்தில், யாழ். சட்டத்தரணிகள் சங்க தலைவர் எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நேற்றுக் காலை 10 மணிக்கு சட்டத்தரணிகள் சங்கங்களின் கூட்டம் நடைபெற்றது.

(6ம் பக்கம் 1ம் கலம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யூரியா உரம் விற்பனைக் குண்டு. M. G. M. For age Stores, No 208, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 22611 1839

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினுல் கல் அரித்து தயாரிக்கப்படுபவை வர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் வினியோகஸ்தர்களும்; விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு, கொக்குவில். 1909

நல்ல நிலையிலுள்ள அச்சகம் விற்பனைக்குண்டு. ஹைறில் பேக் மெசின், குறுஸ் கட்டிங் மெசின், புறுப் மெசின் உட்பட சகல தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி; உயர்கல்வி நிறுவனம், ஆனைப்பந்தி. தினம் காலை 9-00—2-00 மணிவரை சந்திக்கலாம். 1911

பல்வேறு கவர்ச்சிகர நிறங்களில் அழகானதும், நீடித்துப் பாவிக்கக் கூடியதுமான கண்ணுடிஇழையாலான குசினி பேசின் (Sink), Drain Board உடன் விற்பனைக்குண்டு. விலை 750/- ரூபா மட்டுமே. ட்ரேட் சென்ரர், ஹோம் பினன்ஸ் லிமிட்டட், 155 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1484

NV 370 EN வீடியோ டெக் ஒன்று விற்பனைக்கு உண்டு. ராதா 21, வேம்படிவீதி, என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். 1927

No. 1 Huller English மோட்டர் (30 H P., English) ஸ்ராட்டர் உடனடி விற்பனைக் குண்டு. தொடர்பு: அம்பாள் மில்ஸ், மணற்காடு, ஞாரை நகர். 1921

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் ஒன்றரைப் பரப்புக் காணியும் சகல வசதிகளுடனும் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு இ. சங்கர், 428, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23853 1935

நல்ல நிலையில் உள்ள T. V. Set 20'' கலர்ரி.வி. National M 211. (2) Video Cazette Recorder—வீடியோ டெக் National 2000. (3) குளிர் சாதனப் பெட்டி Sisil 280. (4) புத்தம் புதிய Gas Cooker 'ராஜகம்' சம்பியன் ஒழுங்கை, கொக்குவில். 1938

அல்வாய் வடக்கு கொவ்வங்கூடலில் சுமார் நாலரைப் பரப்புக்காணி விற்பனைக் குண்டு. சிறிலங்கா வித்தியாலயத்திலிருந்து முன்னூறு மீற்றர் தூரத்திலும், சக்கோட்டையிலிருந்து எழுநூறு மீற்றர் தூரத்திலும் உள்ள இக்காணி வீடு கட்டவும், வாகனப் போக்குவரத்திற்கும் ஏற்றதாகும். வாங்குபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் க. கதிரமலை, வல்லியானந்தம், துன்னலை வடக்கு, கரவெட்டி. 1923

## தேவை

பயிற்சி பெறுவதற்கு ஆண் தாதிகள் தேவை. குறைந்த ளவு தகமை க. பொ. த (சாதாரணம்) விளம்பர இல: 1919, மே/பா ஈழநாடு' யாழ்ப்பாணம். 1919

உயர் அதிகாரிக்கு (52வயது) அன்பான பெண் துணைதேவை. வயது, சாதி, சமயம், சீதனம் கவனிக்கப்படாது. மூர்த்தி, 11, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1933

## கல்வி

Radio and Electronic Engineering, பெண்களுக்காகிய பிரிவு 23/2/85 சனி காலை 10 மணிக்கு ஆரம்பமாகிறது. மக்களின் கஷ்டநிலை காரணமாக ஒருவித கட்டணமும் இன்றி சிறிது காலத்திற்கு கல்வியை மேற்கொள்ளலாம். பணவசதி உடையோர் விரும்பினுல் உரிய கட்டணத்தை செலுத்தலாம். தொடர்புகள்; பொறியியல் கல்வி நிலையம், சாந்தி சினிமா அருகாமை, யாழ்ப்பாணம். விசாரணைகள் ரைப்பிங் பிரிவு. 1932

## FOR SALE

Philips Refrigerator twin door, Singer Sewing machine, furniture and crockery for sale. Mrs Shanmugasundaram 8, Nallur Cross Road, Jaffna. 1908

## VACANCY

Clerk of Works. We are looking for a young dynamic person with experience in building construction, taking quantities and draughtmanship. Salary negotiable, minimum Rs. 1000/- p. m. Apply with full Bio Data to Director, Jaffna College Technical Institute, Vaddukoddai, before 28th February 1985. 1913

அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

**பதவி வெற்றிடம்**

**பொது முகாமையாளர்**

3-2-85 திகதிய மேற்குறிப்பிட்ட விளம்பரத்தின் விண்ணப்ப முடிவு திகதி 20-2-85 லிருந்து 28-2-85 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

தலைவர்

1930

## செயற்கைமுறை சினைப்படுத்தல் நல்லூரில் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர்ப் பகுதியில் கறவை இனம் வளர்ப்போரின் நலன் கருதி, நல்லூர் கமநல சேவை நிலையத்தில் செயற்கைமுறையில் சினைப்படுத்தும் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஆரம்பமான செயற்கை முறையில் சினைப்படுத்தும் சேவை தினசரி காலை 8 மணி தொடக்கம் 10 மணி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கறவைஇனமான மாடு, ஆடு வளர்ப்போர் இச் சேவையைப் பயன்படுத்தலாம் என்றும், குறைந்தளவு கட்டணமே அறவிடப்படுமென்றும் தீவிர கறவை அபிவிருத்தித்திட்ட வடபிரதேச உப-அலுவலரும் மிருக வைத்தியருமான திரு. ஆர். எஸ். நவரத்தினம் தெரிவிக்கிருர். (மா)

## VACANCY

Vacancy exists for an Account Clerk at Jaffna College Agricultural Institute Maruthanamadam. All inclusive salary Rs, 1000/- p. m. only Apply to Principal before 10-03-85. Principal. 1926

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

**வெற்றிடம்:**

**சைவசித்தாந்தத்துக்கான அறக்கொடைப் பேராசிரியத் தவிசு**

சைவசித்தாந்த அறக்கொடைப் பேராசிரியத் தவிசுக்குத் தகைமையுடைய வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னுல் பெற்றுக் கொள்ளப்படும்.

2. இப்பதவிக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதற்கான கடைசித் தேதி சித்திரை 18, 1985 ஆகும்.

3. விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் இவ்வலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

4. விண்ணப்பப படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23x10 சதம மீட்டர் அளவுள்ள சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடிதவுறையொன்றும் இணைக்கப்படல் வேண்டும்.

**பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
திருநெல்வேலி,
யாழ்பபாணம்.
15-02-1985. 1925

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ



**இன்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் 150-வது ஜயந்தி**

''உனது நெஞ்சிற்குத் துரோகம் செய்யாதே,
மனச்சாட்சியின் படி நட,
நிச்சயமாகவே உனக்கு வெற்றி உண்டாகும்.''

— ஸ்ரீ இராமகிருஷ்ணர்

உள்ளூர் மூலப்பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம்
உள்ளூர் தயாரிப்புகளுக்கு ஆதரவு கொடுப்போம்.

மில்க்வைற் சலவைப்பவுடர்
பெரிய பெட்டி ஒன்றை அனுப்பி
**ஸ்ரீ இராமகிருஷ்ணரின் ஸ்ரிக்கர்**
ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற்,** யாழ்ப்பாணம்.

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி

மறைவு:
5-3-1984



அமரர்

**கந்தையா செல்லத்துரை அவர்கள்**

(பொன்னம்பலம் அன் சன்ஸ் உரிமையாளர்)
தலவாக்கொல்லை

எமது குடும்ப விளக்காய் ஒளிச்சுடராய்ப் பிரகாசித்து, திடீரென அணைந்து எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்துவிட்ட உங்களின் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

துணைவி: திருமதி பு. செல்லத்துரை (தேவி)
புதல்வர்கள்: செ. ராஜசுரேஸ், செ. சுரேஸ்ராஜா.

புவனவாசம்,
உடுவில் தெற்கு, சுன்னுகம். (1922)

## மரண அறிவித்தல்

**திருமதி எலிசபெத் ஞானப்பிரகாசம்**

புலோலி

திருமதி எலிசபெத் ஞானப்பிரகாசம் 19-2-85ல்காலமாகிவிட்டார், இவர் திருவாளர்கள் பிலிப்ஸ், அன்ரனி பாலசிங்கம் (பாறின்) சந்தியாப்பிள்ளை (ஆயர் இல்லம் யாழ்ப்பாணம்), திருமதிகள் மேரியம்மா வேதநாயகம், லூட்ஸ் ஆசீர்வாதம் அவர்களின் தாயாரும் காலம் சென்ற திரு. வேதநாயகம், திரு. ஆசீர்வாதம், திருமதிகள் பவளம் பிலிப்ஸ், பேர்னடேற் பாலசிங்கம், எலிசபெத் சந்தியாப்பிள்ளை (ஆசிரியை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை பருத்தித்துறை) ஆகியோரின் மாமியாரும் ஆவர். அன்னுரின் பூதவுடல் 21-2-85 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு புலோலி புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். 1931

## மணிவாக்கு

கற்புக்கெட்டமாது ஒருத்தியைப்போன்று நீ உலகில் வாழ்வாயாக-அவள்மிகுந்த கவனத்துடன் தனது வீட்டுக்கடமைகளை ஆற்றுகின்ருள். ஆனுல் இரவுபகலாக அவளுடையமனம் கள்ளக்காதலனைச் சிந்தித்த வண்ணம் உளது. கடமைகளைச் செய், ஆனுல் சதாகாலமும் உன் மனதைகடவுள் மீது இருத்திவை.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## கட்டுப்பாடற்ற சமூகமா?

இளைஞர் உள்ளத்தில் இறைவன் உள்ளான்.

இக்காலத்தில் இந்த உண்மையைப் பரிமாறுவதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதை நாமறிவோம்.

எக்காலத்திலும்அழியாத உண்மை இக்காலத்தில் மாறுதல் அடைவது எங்ஙனம்.

'இறைவன் எங்குள்ளார்? இறைவனைக்காட்டு' என்று இன்றைய மாணவர் கேள்வி எழுப்புவது சாதாரணம்.

காரணம்: இறைவனைப் பற்றி அதிகம்பேசி, அவனருளாலே அவன் தாள் வணங்கும் சமூகம், சமயத்தில்-இறைவனில் நம்பிக்கை ஏற்படுத்த முடியவில்லை.

இதனை இன்று பரம்பரை இடைவெளியென்றும் சொல்லப்படுகிறது; சமுதாயவியல், மனோதத்துவ சாத்திரம் போன்ற புதுதம் புதியகலைகள் மெத்தவளருகின்றன; வளரட்டும்.

நாம் மிகச்சாதாரணமாக விளங்கிக் கொள்ளமுடியும் உண்மை; வெள்ளை உள்ளத்தை நாடுபவன் இறைவன் என்பதே.

ஐம்புலன்களுக்கும்அப்பாற்பட்ட ஆறுவது உணர்வை பல பெரியோர்கள் உணர்ந்ததாக நாம் கேள்விப்படுகிறோம்.

அதேபோல் குழந்தைகள் உள்ளத்தில், ஏன் மாணவர் உள்ளத்தில் ஆறுவது உணர்வு தென்படுவதை பெற்றோர்கள், ஆசிரியர்கள் கண்டு அதிசயப்படுவதும், ஆனந்தப்படுவதும் இந்த உண்மைக்குச் சான்றுகின்றது.

இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் அரைவாசிக்கு மேற்பட்டவாக்காளர் இளஞ்சமுதாயத்தவர் என்று சொல்லப்படுகிறது. அதிற் பெரும்பான்மையோர் மாணவர்.

புள்ளி விபரங்கள் எவ்வாருயினும் இங்கு வாழும் இளைஞர்கள் மாணவர்கள் உட்பட சமுதாய வாழ்வில் தங்கள் வருங்காலத்தில் பெரும் அவநம்பிக்கை கொண்டவர்களாக இருப்பது வெட்டவெளிச்சம்.

இலங்கைத் தமிழ் இளைஞர் இத்தகைய பொதுவான அதிருப்தியில் பல படிகள் மேலாக ஏறிநிற்கின்றனர்.

இவர்களின் மேம்பாட்டுக்கு முதியோர் உலகம் தன்னை அர்ப்பணிக்குதா? சமூக நன்னடத்தை என்று சொல்லப்படும் உத்தம பண்பு இன்றைய இளைஞரின் நல்வாழ்வுக்கு அதிகம் உதவுகின்றதா?

இல்லை என்ருல்இன்றைய இளைஞர் ஒரு கட்டுப்பாடற்றவர் எனக்குறிசுடுவது நியாயமாகாது.

இவ்வித மயக்கமுற்ற கருத்துக்கு இளைஞர் சமுதாயத்தில் சில தீயசக்திகள் தூண்டுகோலாக இருப்பதை நாம ஆட்சேபககவில்லை.

தீயசக்திகள் தாமும் வளர்ந்தோர் உலகம் வளர்த்து வரும் "நேர்ந்துவிட்ட கிடாய்கள்" என்று கொள்ளலாம்.

அது எவ்வாருயினும் இந்நாட்டின் இளைஞர் சமுதாயத்தில் தமிழ் மாணவர் ஒரு தனித்துவ இடம் வகித்து வந்ததை மறுத்தல் மடமை.

நாம் குறிப்பிடும் தனித்துவம் எமக்குரித்தான ஒரு மரபில் உறுதி கொண்டது.

எம்மை ஆட்டி வைக்கும் ஒரு விளக்க முடியாத சக்தியில் நம்பிக்கை கொண்ட சான்ருேரின் வாரிசுகளே இன்றைய இளந்தலைமுறை.

வாழையடி வாழையென வந்ததிருக்கூட்டத்துக்கு ஒரு விபத்து ஏற்பட்டுள்ளது; அதனைத் திருத்தி எங்கள் வாழ்வை புனரமைக்க இளைஞர் குழாம் முன்னிற்கின்றது. காரணம அவர்களே அந்த விபத்தால் பாதிக்கப்பட்டவர்கள்.

வஞ்சனையற்ற ஆனுல் முற்றும் முதிர்ச்சி பெருத சமுதாயம் என்தால் சான்ருேர் வழிகாட்டல் அவசியம். இவர்கள் வாளாவிருந்தால் வேளாண்மை வீடுவந்து சேராததற்கு எல்லோரும் பொறுப்பேற்க வேண்டும்.

ஒருசிறு உதாரணம்; வருகிற27ம்தேதிநடைபெறவிருக்கும் ஜி.சி ஈ (சாதாரணம்) பரீட்சை மீண்டும் குழப்பப்படுமோ என்ற அச்சம் மாணவர் மத்தியில் நிலவுகிறது.

இத்தகைய பொறுப்பற்ற செயல் வீரவாழ்க்கையை விரும்பும் இளைஞர் சமூக தடுத்து நிறுத்த முடியாததா? இதில் ஈடுபடும் தீப்சக்திகள் நாம் ஒரு கட்டுபாடற்ற சமூகம் என்ற அவப் பெயருக்கு இடம் அளிக்கின்றன.

## மாணவனுக்கு உற்சாகம்

(புலோலி)

1983-ம் ஆண்டுநடைபெற்ற க. பொ. த. [உயர்தரம்] பரீட்சையில் 365 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கையிலும் முதலாம் இடத்தைத் தட்டிக்கொண்ட பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவனுக்கு ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை 1500 ரூபாவை பரிசாக வழங்கியுள்ளது.

துன்னுலையைச் சேர்ந்த மாணவனுன செல்வன் தர்மராஜா குகராஜா என்பவர் கடந்த 1983-ம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. [உயர்தரம்] பரீட்சையில் தூயகணிதம், பிரயோககணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய நான்கு பாடங்களிலும் "ஏ" தரத்தில் சித்தியடைந்தார்.

## ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவடியில்

# உய்திபெற தஞ்சமடைவோம்!

இன்று சிறுபான்மை இனமான தமிழர்கள் படும் பாடு சொல்லுதற்கரியது. இன்று ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜன்மதினம் இவரது வாழ்க்கைக்கும் நமது துன்பங்களுக்கும் என்ன தொடர்பு என்று பலர்எண்ணக்கூடும். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தகப்பனுர் ஒரு சமயம் அவ்வூர் ஜமீன்தாரினுல் ஒருவழக்கில் பொய்ச்சாட்சி சொல்லும்படி ஏவப்பட்டார். ரொம்ப ஏழைப் பிராமணர் ஆயினும் சத்தியத்துக்கு கட்டுப்பட்டவர். ஜமீன்தாருக்கு சாதகமாக நடக்காவிட்டால் விளைவுகள் பாரதூரமாக இருக்கும் என்பதையும் பொருட்படுத்தாமல் பொய்ச்சாட்சி சொல்ல முடியாதென்று மறுத்தார். அதனுல் நிந்திக்கப்பட்டு அவரது வீடு, வாசல், நிலபுலன்கள்யாவையும் இழந்து அவ்விடத்திலிருந்து விரட்டி அடிக்கப்பட்டார்.

சத்தியவாழ்வு வாழ்ந்த காரணத்தால் இவருக்கு உற்ற நண்பர் காமார்புகூர் என்னும் கிராமத்தில் வசிக்க சிறுகுடிசையும் நிலமும் கொடுத்து உதவினுர். ஸ்ரீ இராமகிருஷ்ணர் தெய்வநம்பிக்கையில் மிகவும் நாட்டம் உடையவராக திகழ்ந்தார் ஒருசமயம் தக்ஷிணேசுவர காளிகோவில் தர்மகர்த்தா மதுரநாதர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடன் வாதிட்டார். "கடவுள் தானும் ஒரு நியதிக்கு உட்பட்டிருக்கிருர்" என்ருர் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறுவார்த்தை பேசாமல் அடுத்தநாள் ஒருரோஜா செடியில் வெள்ளை,சிவப்பு ரோஜாக்கள் உள்ள கிளையை கொண்டு வந்து அவருக்குகாட்டி 'இறைவன் எல்லாம் வல்லவர் அவரால் எதையும் மாற்றமுடியும் இறைவன் எந்த நியதிக்கும் கட்டுப்பட்டவர் அல்ல" என்று நிரூபித்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் காளியை நேரில் பார்க்க முடியவில்லை என்றதும் அக்கோவிலிருந்த அரிவாளால் தன்னை வெட்டப் போன பொழுது காளி காட்சி கொடுத்தார். தெய்வம் ஒருக்காலும் உடனடியாக காட்சியோ அருளோ கொடுப்பதில்லை. தீவிரபக்தியும் வைராக்கியமும் நம்மிடை ஏற்பட தெய்வம் நம் யாவர்க்கும் புனிதவாழ்வைக் கொடுக்கும் என்பது உறுதி. இப்புனித நாளில் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணதேவரின் திருவடியில் உய்திபெற தஞ்சம் அடைவோமாக.

சுவாமி சித்ரூபானந்தா

## மருத்துவ பீடம்: சித்தி பெற்ருர்

(யாழ்ப்பாணம்)

கடந்த செவ்வாய் ஈழநாடு 6ம் பக்கத்தில் வெளியான யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இறுதி (ஆண்டு 1984 நவ-டிச) பரீட்சையில் இரண்டாம் வகுப்பில் சித்திபெற்ருேர் விபரத்தில் செல்வி எஸ். சிவராஜாவின் பெயர் தவறுதலாக விடுபட்டுவிட்டது.

## தவக்காலச் சிந்தனை



### 2—ம் நாள்

"ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும், தன்னையே பாழாக்கினுல் பயன் என்ன? (லூக் 9/25) பணம் என்றும் பொருள் என்றும் மனதையே இருளாக்கி மமதையில் வாழும் மனிதனே! கேள். நல்லதிலிருந்து கெட்டதை இனங்காணும் அறிவு படைத்த நீ உலகமெல்லாம் உனதாக்கியும் உன்னையே இழந்து விட்டால் நீ அடையும் இலாபம் என்ன? அழிந்து போகும் செல்வத்திற்காக அழியாத ஆன்மாவை இழந்துவிட ஏன் அயராது முயலுகிருய்? "என்னைப் பின்செல்ல விரும்புகின்றவன், தன்னையே மறுத்து தன் சிலுவையை நாள்தோறும் சுமந்துகொண்டு என்னைப்பின் தொடரட்டும்" (லூக் 9/23) என்ற கிறிஸ்துவின் வார்த்தைக்கு, வடிவம் கொடு. இதயத்தில் அமைதி பெறுவாய்; இழந்ததெல்லாம் பெற்றுக்கொள்வாய்.

அருட்திரு வின்சென்ற் பற்றிக்
O. M. I

## குருதேவர்மணிமொழிகளை பின்பற்றி வாழ்வோம்

ஆங்கிலம் கற்று உத்தியோகம் பார்த்துச் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையும், ஆங்கிலேயரைப் போன்று உடை உடுத்து உணவு அருந்தவேண்டுமென்ற அவாவும் மிக்கிருந்த மக்கள் மத்தியில் தெய்வீக சிந்தனை அருகி இருந்த காலகட்டத்தில், புண்ணிய பூமியாகிய பாரத நாட்டின் வங்கப் பகுதியில் 'காமார்புகூர்' என்னும் கிராமத்தில் சூதிராம் சட்டோபாத்தியாயருக்கும் சந்திரமணிதேவியாருக்கும் கனிட்ட புதல்வனுக அவதரித்தார் குருதேவர். கதாதரர் என்னும் பிள்ளைத்திருநாமம் பெற்ற குருதேவர் பாடசாலை சென்று கற்றவை மிக மிகக்குறைவு. சிறு வயதிலேயே இறை பக்தியில் அபார நம்பிக்கை கொண்ட கதாதரர் காளி தேவியின் அளவற்ற அன்புக்கும் அருளுக்கும் பாத்திரமானுர். இவரது தெய்வப்பித்தை உணராத பெற்ருேர் சித்தப்பிரமை என்று நினைத்தனர். ஐந்து வயதுப் பெண்ணுகிய சாரதாமணிதேவியாரைமணம் செய்தும் வைத்தனர். இதனுல் எல்லாம் குருதேவர் கவரப்பட்டார் அல்லர். தன்போக்கிலே ஆன்மவிசாரத்திலேயே ஈடுபட்டார். அவர் எங்கும் திரிந்து ஞானத்தைப் பரப்ப வில்லை. இருந்த இடத்திலேயே தம்மைத் தேடி வந்தவர்களின் தகுதி அறிந்து ஞானஒளி ஊட்டினுர். இவ்விதம் வந்தவர்களில் தலைசிறந்தவர் சுவாமி விவேகானந்தர். எதற்கும் அஞ்சாத வீரமும், கல்வியும் அறிவும் ஆற்றலும் கொண்டு இந்துமத தர்மத்தை அகில உலகமும் அறியச் செய்த சுவாமி விவேகாநந்தரைப் பிரதம சீடராகப் பெற்ற பெரும் பேறுடையவர் குருதேவர். குருதேவரை இன்று மட்டுமன்றி அனுதினமும் நினைவுகூர்ந்து அவரது மணி மொழிகளைச் சிந்தனை செய்து அவற்றின் வழிநின்று உய்தி பெறுவோமாக.

மு.இராமலிங்கம்
பிரதி அதிபர்
யா/வைத்தீஸ்வரவித்தியாலயம்

## "ஆன்மீக வாழ்வு வாழ வேண்டும்"

[மானிப்பாய்]

"இறைவனுடைய அருளுக்காக நாம் ஏங்காது, அருள் வாழ்வு என்பதைப் பற்றியே சிறிதும் சிந்திக்காது மனம் போன போக்கிலே வாழ்ந்து கொண்டுஇறைவன் இருந்தால் எம்மை ஏன் காப்பாற்றவில்லை என்று சில வேளைகளில் கேட்கிருேம். இது மிகவும் பரிதாபத்திற்குரியதாகும்."

இவ்வாறு திரு சி பி.செல்லையா நவாலியில் லிங்கநாயகி வைத்தியசாலையில் மகாசிவராத்திரியோடு இணைந்த இரு நாள் அந்தர்யோக நிகழ்ச்சியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் அங்கு பேசுகையில் "இன்றையஎமதுஅவல வாழ்க்கைக்கு இறைவன் இருக்கிருன் என்ற எண்ணமில்லாது. வீண் கேளிக்கைகளே வாழ்வு என்று நம்பிக் கொண்டிருந்ததே காரணம். எனவே நாம் எல்லோரும் நெருக்கடிகள் சூழ்ந்த இன்றய நிலையிலாவது இறைவனைச் சரணடைந்து ஆன்மீக வத்ழ்வை வழாத் தொடங்கவேண்டும்." என்று கூறினுர்.

## யாழ். தபால் கந்தோரில்

# முத்திரைகளுக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரியதபால்கந்தோரில் 50 சதம் முதல் 10 ரூபா வரையிலான முத்திரைகளுக்குப் பெரு தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதனுல் பொதுமக்கள் தமது அன்ருடத் தேவைகளுக்குக்கூட 50 சதம், 60 சதம் முத்திரைகளைப் பெறமுடியாத நிலைக்குள்ளாகியுள்ளனர்.

யாழ். பெரியதபால் கந்தோருக்குத் தினமும் பெரும் தொகையான மக்கள் முத்திரைகளைப் பெறுவதற்காகச் சென்று, ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கிருர்கள்.

இத்தபால் கந்தோரில் கடமையாற்றும் உயரதிகாரியொருவரின் அசமந்தப்போக்கினுலேயே இம்முத்திரைத் தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்பட்டது.

மேலிடத்திலிருந்து முத்திரைகள் இத்தபாலகத்திற்கு அனுப்பப்படுகின்ற போதும் இந்த அதிகாரி அவற்றைப் பொறுப்பேற்கத் தயக்கம்காட்டுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய கடலோரப் பாதுகாப்பு:

# அமைச்சர் நரசிம்மராவ் கடற்படை அதிகாரிகள்பேச்சு

சென்னை, பெப். 20

இந்தியக் கடலோரப் பாதுகாப்பு குறித்து இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் திருவனந்தபுரம் ராஜ்பவனில் இந்தியக் கடற்படை, கடலோர ரோந்துப்படை அதிகாரிகளைச் சந்தித்து, கலந்துரையாடினர்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாவது குறித்தும் திரு. நரசிம்மராவ் இச்சந்திப்பின் போது இவ்வதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் கூறப்பட்டது.

இந்தியக் கடலோரப் பகுதியில் இந்தியக் கடற்படைக் கப்பல்களின் ரோந்து நடவடிக்கைகளை அதிகரிப்பது பற்றியும் இச்சந்திப்பின் போது ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## தமிழ்நாடு சட்டசபை, சட்டமேலவை

# கூட்டத்தொடர் மார்ச்8-ல் ஆரம்பம்

சென்னை, பெப். 20

தமிழ்நாடு சட்டசபை, சட்டமேலவை ஆகியவற்றின் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 8-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இக்கூட்டத் தொடரில் தமிழ்நாடு ஆளுநர் திரு. எஸ். எல். குரானு உரையாற்றுவார்.

இந்தக் கூட்டத் தொடரில் தமிழ்நாடு சட்டசபை, சட்டமேலவை ஆகியவற்றின் உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள்.

### சபாநாயகர் தேர்தல்

தமிழ்நாடு சட்டசபைச் சபாநாயகர், துணைச் சபாநாயகர் தேர்தல் இம்மாதம் 27-ம் திகதி நடைபெறவுள்ளது.

### சட்டசபை உறுப்பினர் பதவிப் பிரமாணம்

தமிழ் நாடு சட்டசபையின் புதிய சட்டசபை உறுப்பினர்கள் இம்மாதம் 25-ம் திகதி பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்கள். இவர்களுக்கு தமிழ்நாடு ஆளுநர் திரு. எஸ். எல். குரானு பதவிப்பிரமாணம் செய்து வைப்பார்.

### தற்காலிக சபாநாயகர்

தமிழ்நாடு சட்டசபையின் தற்காலிக சபாநாயகராக திரு. ப. உ. சண்முகம் தமிழ்நாடு ஆளுநரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு சட்டசபை முதல்வராக திரு வி. ஆர். நெடுஞ்செழியனும், சட்டமேலவைமுதல்வராகதிரு. ஆர். எம். வீரப்பனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## பெரும் தொகையான அகதிகள் தினமும் ராமேஸ்வரம் வருகின்றனர்

சென்னை, பெப். 20

இலங்கைத் தமிழ் அகதிகள் பெரும் தொகையாகத் தினமும் ராமேஸ்வரம் வந்தவண்ணமுள்ளனர். நேற்றும் பெரும்தொகையான தமிழ் அகதிகள் படகுகள் மூலம் ராமேஸ்வரம் வந்ததாக அறிவிக்கப்பட்டது.

இந்த அகதிகள் சொந்தப் படகுகள் மூலமும், வாடகைக்கு அமர்த்தப்பட்ட படகுகள் மூலமும் ராமேஸ்வரம் வருவதாகக் கூறப்பட்டது.

அடுத்த மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள மக்களை வெளியேறும்படி இலங்கை ராணுவம் கேட்டுள்ளதாகவும் இந்த அகதிகள் தெரிவித்துள்ளனர்.

## கர்னாடக சட்டசபைத் தேர்தல்:

## தேர்தல் வரலாற்றில் நீளமான வாக்குச்சீட்டு

புதுடில்லி, பெப். 20

கர்னாடக சட்டசபைத் தேர்தலில் ஒரு தொகுதியில் 301 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதற்காக 34 அங்குல நீளமும், 24 அங்குல அகலமும் கொண்டவாக்குச் சீட்டு அச்சடிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வரலாற்றிலேயே அச்சடிக்கப்பட்ட மிக நீளமான வாக்குச்சீட்டு இது வென்று கூறப்பட்டது. இந்த வாக்குச்சீட்டை வாசித்து வேட்பாளர்களின் பெயர்களை அறிந்து கொள்ளவே வாக்காளர்களுக்கு அதிகளவு நேரம் செலவாகுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ‘தமிழர் விடுதலை பாதுகாப்புப் பேரணி’ அறிக்கை

(யாழ்ப்பாணம்)

‘‘மாணவர் கல்வியைக் குழப்புதல் தவறான காரியமாகும்’’ என்று ‘தமிழர் விடுதலை பாதுகாப்பு பேரணி’ யின் மத்திய அரசியல் குழு விடுத்துள்ள அறிக்கையில் கண்டித்துள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

‘‘தமிழ் மாணவரின் கல்வியில் குழப்பமும் விரக்தியும் ஏற்பட்டுவரும் இவ்வேளையில் ஒருசிலர் எமது மாணவர்களின் கல்வியில் குழப்பத்தை உண்டு பண்ணினால் எமது இனத்திற்கு பாரிய நஷ்டமும், பாதிப்பும் ஏற்படுமே தவிர எவ்வித லாபமும் ஏற்படப்போவதில்லை. எனவே எமது மாணவர்களின் கல்வியைக் குழப்பி எமது விடுதலைப் போராட்டத்திற்குப் பக்கபலமாக உருவாகும் சிந்தனையாளர்களையும் படித்த இளைஞர்களையும் இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலையை உண்டு பண்ணாமல் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து அவர்களின் கல்வி முன்னேற உதவியளிக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும் அதை விட்டு பரீட்சையைக் குழப்புதல் கல்வியைத் தடை செய்தல் என்பன எமது விடுதலைப் போராட்டத்திற்குப் பயனற்றவையாகும் எமது விடுதலைப் பயணம் வருங்கால சிந்தனைச் சிற்பிகளான மாணவர் கையில்தான் தங்கியுள்ளது. (மா)

## இல. தமிழர்கள் படுகொலைக்கு கண்டனம்

சென்னை, பெப். 20

இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை இந்திய குடியரசுக் கட்சியின் தமிழ்நாடு பிரிவு கண்டித்துள்ளது

## அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

‘‘மறைந்த தமிழ்த் தலைவர் சுந்தரலிங்கம் பல துறைகளிலும் சிறப்புபெற்றவர் அவர் இன்றைய சகாப்தத்தில் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

தமிழீழ விடுதலை அணி முன்னாள் வவனியா எம். பி. திரு, சுந்தரலிங்கத்தின் மறைவு குறித்து விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. [மா]

# ‘அரசியல் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபடுவோம்’

(யாழ்ப்பாணம்)

தென் இலங்கையிலுள்ள சிங்களதொழிலாளி வர்க்கமும் சாதாரண மக்களும் தமிழ்மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை தெளிவாக அறிந்து அதன் தீர்விற்காக செயல்படாதவரை எமது பிரச்னைகள் பூரணமாகத்தீரப் போவதில்லை. இதற்கான முன்முயற்சிகளை வட. பிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு மேற்கொண்டு வருகின்றது’’

இவ்வாறுஈழநாடு அச்சகஊழியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் லங்கா தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் வட- பிராந்திய செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் கூறினர்.

ஈழநாடுகாரியாலய இளைப்பாற்று மண்டபத்தில் திரு. கு. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர்மேலும் பேசுகையில் ‘‘எமது பிரதேசத்தில் நடைபெறும் அடக்குமுறைகளையும் அட்டூழியங்களையும் எதிர்த்து குரல்கொடுத்து போராடி பிரசினைகளின் தீர்விற்காக அரசியல் வேறுபாடுகளை மறந்து தொழிற்சங்கங்கள் ஐக்கியப்பட்டு செயல்பட்டுவருகின்றன. வடபகுதியில் சிவில்நிர்வாகம் இல்லை மக்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் எதுவித உத்தரவாதமும் இல்லை என்ற நிலைதான் காணமுடிகின்றது. யார் இந்தஅட்டூழியங்களை செய்கின்றார்கள் இவற்றிற்கு முடிவில்லையா என்ற ஏக்கத்துடன் மக்கள் இன்றுபெரிதும் வாடுகின்றனர். தொழிலாளவர்க்கம் தலைமைதாங்கி வெகுஜனப் போராட்டங்கள் நடத்துவதன் மூலம்தான் இவற்றைக் கட்டுப்படுத்தமுடியும் என்றார்.

‘‘வெளிநாட்டு சக்திகள்எமது உரிமைகளைப் போராடிப்பெற்றுத் தரும் எனப்பகல்கனவு கண்டு கொண்டிராமல் அவர்களின் ஒத்துழைப்பு உதவிகள் வழிகாட்டலில் நாமே எமக்கு உரிமைக்காக போராடவேண்டும். எம்மத்தியில் இருக்கும் பிளவுகள் எதிரிக்கே உபயோகப்படும். எனவே எமது பிரதேசத்தில் உள்ள சகல ஜனநாயகசக்திகளும் ஒற்றுமைப்பட்டு. செயல்படவேண்டும் வட- பிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு மேற்கொண்டுவரும் சகல அடக்குமுறைக்கும் எதிரான நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு கொடுப்பதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

## சுந்தரருக்கு ‘நடா’ அஞ்சலி

[கொழும்புத்துறை]

தமிழ் மக்களின் முன்னேற்றத்திலும், பிரதேச அபிவிருத்தியிலும் அதிக ஈடுபாடும் செயற்திறனும் கொண்ட அமரர் திரு சி. சுந்தரலிங்கத்தின் மறைவு நாட்டிற்குப் பெரும் நஷ்டமும் இழப்புமாகுமென்று இலங்கைப்பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா விடுத்துள்ள இரங்கற்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது:- கடந்த இருவருடங்களுக்கு முன்னர் நான் திரு. சுநதரலிங்கம் அவர்களை வவனியாவில் சந்தித்து அவருடைய ஆசிகளைப் பெற்றேன். அப்போது அவர் எனக்களித்த உற்சாகம் என்றும் மறக்க முடியாது. தமிழ் மக்கள் பனையைப் போன்றவர்கள் என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.

## ஆசிரியர் சம்பள மீளாய்வு விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

சிறப்புப்பட்டதாரி ஆசிரியர் அல்லது பட்டதாரி ஆசிரியர்

விஞ்ஞானம்/கணிதம்/விவசாயம்/ஆங்கிலம்/கல்வி எனும் பாடங்களுடன்

| இப்போதைய சம்பளத்திட்டம் | | புதிய சம்பளத்திட்டம் | |
|---|---|---|---|
| ரூ. 12360-6x240, 5x360-5x480-18000 | | ரூ. 14640-6 x 240, 2x360. 8x480-20640. | |
| ரூபா. 13800/- முன் த. த. | | ரூபா. 16080/- முன் த. த. | |
| மாதாந்தப் படிகள் | வருடாந்தப் படிகள் | மாதாந்தப் படிகள் | வருடாந்தப் படிகள் |
| 1030 | 12360 x 240 | 1220 | 14640 x 240 |
| 1050 | 12600 | 1240 | 14880 |
| 1070 | 12840 | 1260 | 15120 |
| 1090 | 13080 | 1280 | 15360 |
| 1110 | 13320 | 1300 | 15600 |
| 1130 | 13560 | 1320 | 15840 |
| 1150 | 13800 x 360 | 1340 | 16080 x 360 |
| 1180 | 14160 | 1370 | 16440 |
| 1210 | 14520 | 1400 | 16800 x 480 |
| 1240 | 14880 | 1440 | 172·0 |
| 1270 | 15240 | 1480 | 17760 |
| 1300 | 15600 x 480 | 1520 | 18240 |
| 1340 | 16080 | 1560 | 18720 |
| 1380 | 16560 | 1600 | 19200 |
| 1420 | 17040 | 1640 | 19680 |
| 1460 | 17520 | 1680 | 20160 |
| 1500 | 18000 | 1720 | 20640 |

(முடிந்தது)

# சென்பற்றிக்ஸ் கல்லூரி...

1-ம்பக்கம் 4ம் கலத்தொடர்ச்சி

செலவுக்கெனப் பெற்றேரால் வழங்கப்பட்ட பணமும் சேர்ந்ததென்றும் இதனை எடுத்துச் செல்ல வேண்டாமென்று மன்ருடியும் கொள்ளையடித்தவர்கள் கொண்டுசென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தின் போது விடுதியில் இருந்த ஆசிரியர் ஒருவர் தெரிவித்ததாவது:

''நேற்றுமுன்தினம் இரவு 10-15 மணியளவில் கல்லூரியின் 2வது மாடி விடுதியில் இரு குருவானவர்கள் தொலைக் காட்சி பார்த்துக் கொண்டிருந்தபொழுது கல்லூரிக் காவலாளி சகிதம் 2வதுமாடிக்குள் திடீரெனப் புகுந்த இனந்தெரியாத நான்கு நபர்கள் ''இந்தியாவிலிருந்து வந்திருக்கின்றேம்; எங்களுக்குப்பணம் அவசியம் வேண்டும்'' என்று மிரட்டினுர்கள்.

சரளமாகத் தமிழில் பேசிய நான்கு நபர்களும் நீளக்கால் சட்டை அணிந்திருநதார்கள் வந்தவர்களில் ஒருவர் கண்கள் தெரியக்கூடியதாக மூக்களவுக்கு கைக்குட்டையால் மறைத்துக் கட்டியிருந்தார் கைத்துப்பாக்கி, கைக்குண்டும் வைத்திருந்தார்கள்.

''இதுதனியார் கல்வி நிறுவனம்; ஏழைமக்கள் தங்கள் பிள்ளைகளின் கல்விவளர்ச்சிக்குக் கொடுத்த பணம், மற்றது ஆசிரியர்களின்சம்பளப்பணம் இதில் கைவையாதீர்கள் என்று கெஞ்சிக்கேட்டோம்.

அச்சமயம் கல்லூரி அதிபரும் வந்துசேர்ந்தார். 'உங்கள் பிரச்னை பற்றி நாங்கள் கேட்க வரவில்லை; எங்கே பணம் இருக்கிறது என்று கேட்டு மீண்டும் பயமுறுத்தினுர்கள்'

துப்பாக்கியைக்காட்டி இரும்புப்பெட்டித்திறப்பை எடுத்துக்கொண்டவர்கள், இரும்புப்பெட்டியைத் திறந்து அதற்குள்ளிருந்த 2லட்சம் ரூபாவையும் சேலை பாக்கொன்றுக்குள் அடைத்துகொண்டு புறப்பட்டார்கள்.

''எங்களுக்கு வேறுவருமானம் இல்லை; எடுத்தபணத்தில் ஒருபகுதியையாவது தாருங்கள்'' என்று மீண்டும் கெஞ்சிக் கேட்டோம்.

''வந்தவர்களில் ஒருவர் மனமிரங்கி அதற்கு உடன்பட்ட போதிலும் மற்றவர்கள்விட்டுக்கொடுக்காத நிலையில் வாதாடினுர்கள்.

''எங்களை கல்லூரி வாசல் 'கேட்'வரையும் கூட்டிச்சென்றவர்கள், கேட்டைத்தாண்டியதும், 'சத்தம் போடாதீர்கள் கைக்குண்டு வீசுவோம்' என்று எச்சரிக்கை செய்துவிட்டு வந்த வாகனத்தில் ஏறி தலைமறைவாகிவிட்டார்கள்.

கொள்ளை அடிப்பதற்கு முன்னர் அங்கிருந்த தொலைபேசி தொடர்பு துண்டித்துவிட்டதை பின்னரே அறியக்கூடியதாக இருந்தது''. [மா]

# இன்றைய பலன்

மாதம்—மாசி
திகதி—10 [21-2-1985]
வாரம்—வியாழன்
திதி—துதியை பின்இரவு வரை
நக்ஷத்திரம்—பூரட்டாதி பின்இரவு வரை

மேடம்: நண்பர்கள் மூலம் ஏமாற்றம் அடையக்கூடும். கவனம் வேண்டும்.

இடபம்: சகோதர வழியால் சஞ்சலம் தோன்றக் கூடும் புத்தி சாதுர்யம் வேண்டும்

மிதுனம்: தாய்வழியால் மனக்கவலை தோன்றலாம். இயந்திரங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேணடும்.

கடகம்: புத்திரர் ஒருவரின் விடயமாக கவலை அடையக்கூடும்.

சிங்கம்; எதிரிகள் மத்தியில் இருந்து பல சூழ்ச்சிக்களை கள் தாக்கும். பொறுமை வேண்டும்.

கன்னி: களஸ்திர வழியால் கவலைகள் தோன்றும் காதலர்கள் மத்தியில் தென்றல் வீசும்.

துலாம்: உதவிசெய்யப் போய் உபத்திரவப்பட நேரிடும். எதையும் தாங்கும் இதயம் வேண்டும்,

விருச்சிகம்: புண்ணிய காரியங்களை மனம் நாடும் பெரியோர்களின் ஆசியும் கிடைக்கும்.

தனுசு: பொதுத்துறையில் ஈடுபடுவோருக்கு பொறுமை வேண்டும்.

மகரம்; எதிர்பார்த்த வேதனத்தல் தடைகள் தோன்றும்

கும்பம்: வேண்டிய ஒருவருடன் பகைத்துக்கொள்ள நேரிடும்.

மீனம்; உடல்நலம் பாதிக்கப்படும் உணவு விடயத்தில் கவனம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

ரீகல் மினி
தினசரி 10-15, 1-30
தியாகராஜன், அம்பிகா, ராஜீவ், ஊர்வசி நடிக்கும்
சத்யா மூவிஸ்
நெருப்புக்குள் ஈரம்

ரீகல்
தினசரி 10-30, 2-00
AN OFFICER AND A GENTLEMAN
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
36 Chamber of Sholine (Karatte Film)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-30 P.m
GREEN ICE
(Adults)
22-2-85 தொடக்கம்
நீதிபதி

# புளொட்..

[1ம் பக்க 5ம்கல தொடர்ச்சி]

வல்ல'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அப்பிரசுரத்தில் தெரிவிககப்பட்டிருப்பதாவது:—

''தமிழீழ விடுதலைப் போராட்டமானது முனைப்பாக மாறிக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டததையும்; தமிழீழ விடுதலைப் போராளிகளையும், தமிழீழ மக்களையும் நிர்மூலமாக்குவதற்கு சிறிலங்கா அரசு பல்வேறு வடிவங்களைக் கொண்டதான ஒடுக்கு முறைகளைக் கையாண்டு வருகின்றது இத்தகைய ஒடுக்கு முறை வடிவங்களில் ஒன்ருன கடல் பாதுகாப்பு வலையத்தையும் மீறி சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மோட்டார் இயந்திர விசைப்படகானது பெப்ரவரி 08-1985 நடுக்கடலில் வைத்து சிறிலங்கா கடற்படையினரால் முற்றுகைக்குள்ளானபோது எமது இயக்கத் தோழர்களுக்கும் கடற்படையினருக்கும் இடையே ஏற்பட்ட நேரடித் துப்பாக்கிச் சமரில் எமது இயக்கத்தோழர்களான ஞானவேல் (பாண்டி அல்லது கறுப்பன்) வல்வெட்டித்துறை; சுதாகரன் (சின்னமலை அல்லது இரகுபதி) மீசாலை; இரஞ்சித் றொபேட் (டக்ளஸ்) வவனியா; இரவீந்திரன் (அம்பி) யாழ்ப்பாணம்; மோகன் (ரூபன்) கரவெட்டி ஆகியோர் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர்.''

# நேரில் கண்டவர் சாட்சி சொல்வாரா?

[யாழ்ப்பாணம்]

யாழ். தட்டாதெருச் சந்தியில் நடந்த துப்பாக்கிச்சூட்டின்போது பலியான சுழிபுரத்தைச் சேர்ந்த பூபாலு லோகேஸ்வரனின் [28 வயது] மரணவிசாரணையில் சாட்சியமளிக்க சம்பவத்தை நேரில் பார்த்தவர்களை உடன்வருமாறு யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் தெரிவித்துள்ளார்.

இறந்தவர் நகைக் கடையில் வேலை செய்துவந்தாரென்றும், சம்பவதினம், ஆயுதப்படையினர் துப்பாக்கியால் சுட்டார்களென்றும், அச்சமயம் இவர் காயமடைந்து பின் மரணமாஞரென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

இறந்தவர் தன்னை இராணுவத்தினர் சுட்டதாக பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்திருப்பதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது,

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. [க]

# சுவரொட்டி

(யாழ்ப்பாணம்)

''தவிர்க்கமுடியாத சந்தர்ப்பத்தால் நீங்கள் கொள்ளையில் ஈடுபடின் கொள்ளையடித்ததை உரிமைகோரி மக்களின் சந்தேகத்தைப் போக்குவது உங்கள் கடமை''.

தமிழீழ செம்படை சுவரொட்டி மூலம், விடுதலைஇயக்கங்களுக்குவிடுத்துள்ளவேண்டுகோளில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சுவரொட்டிகள், யாழ். நகரில் பல இடங்களில் நேற்றுக் காணப்பட்டது.

# யந்திரம் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

யாழ் கல்விக் கந்தோரில், நேற்று முன்தினமிரவு ரேனியா யந்திரம் ஒன்று இனந்தெரியாதவர்களால் கொள்ளையடிக்கப்பட்டது. [க]

# குண்டு வைத்து தகர்ப்பு

[யாழ்ப்பாணம்]

கல்லுண்டாய் உப்பளம் விடுதி நேற்று முன்தினம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது. [க]

# பிரஜைகள் குழு இணைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பிரஜைகள்குழுக்களின் இணைப்புக்குழுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாநகர சபை ஆலோசனை சபை கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அவ்வப்பகுதி தலைவர், செயலாளர்களால் சமூகம்தர முடியாவிட்டால்; அவர்களுக்காக இரண்டு பிரதிநிதிகளை அனுப்பிவைக்கலாமென்றும், நாட்டின் நிலைமை காரணமாக ஏதாவது ஒருபகுதி குழுவினுக்கு அழைப்பிதழ் கிடைக்காமல் இருந்தாலும்கூட, அந்தக் குழுக்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படும் என்றும் பிரஜைகள் குழுச் செயலாளர் இ. பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (ரா)

# நைஜீரியா...

1ம் பக்க 5ம்கல தொடர்ச்சி]

ளதைத் தொடர்ந்தே இந்த ஆசிரியர்கள் இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளனர்.

நைஜீரியாவில் போதுமான அளவு தரமான ஆசிரியர்கள் இருப்பதால் வெளிநாட்டுஆசிரியர்களை திருப்பி அனுப்ப வேண்டுமென்று பல தரப்பிலிருந்தும் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்ததைத்தொடர்ந்தே ராணுவ அரசு இந்த முடிவை எடுத்திருக்கிறது.

# மனநோயாளர்களை பாதுகாக்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

மனநோயினுல் பாதிப்படைந்து பராமரிப்பற்ற நிலையில் நடமாடும் மனநோயாளர்களை இப்சிக்காது பாதுகாக்க வேண்டும் என்று, தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மன நோயாளர் நிலைய நண்பர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கயில் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''எமதுவைத்தியசாலை மனையில் மனநோயாளர் பகுதியில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் பல நோயாளர்கள் சந்தேகத்தின் பேரில் தாக்கப்படுவதும் கொலை செய்யப்படுவதுமான சம்பவங்கள் சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

''மனநோயாளர்களின் நடமாட்டம், செய்கை என்பன அவர்களை அறியாதவர்களால் சந்தேகத்துக்கிடமான முறையில் நோக்கப்படுகிறது. இது இயல்பாக இருந்தாலும் தண்டிக்க முற்படுவது அபத்தமானதாகும்.

''இவ்வாருன செய்கையில் ஈடுபடும் எந்தநபரோ அல்லது குழுவோ தீர ஆராய்ந்து அப்பாவி மன நோயாளிகள் பாதுகாககப்படுவதை உறுதி செய்யும்படி பணிவுடன் வேண்டுகிறேம்'' (மா)

# ''லொறியை திருப்பித்தாருங்கள்''

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின்சுகாதாரப்பகுதியின் குப்பை ஏற்றும் லொறியை எடுத்துச் சென்றவர்கள், மக்களின் நன்மை கருதி உடன் திருப்பி ஒப்படைக்குமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

# இ. தொ. கா. துணைத்தலைவர் காலமானுர்

(கொழும்பு)

இ. தொ. காவின் துணைத் தலைவர் எம் ஜே விஜயசுந்தரம் (74 வயது) நேற்று மாலை கொழும்பிலுள்ள தனியார் வைத்தியமனையில்காலமானுர்.

பிரபல தொழிற்சங்கவாதியான இவர் 1947இல் காங்கிரஸில் இணைந்து இ தொ. காவின் நிதிச்செயலாளர், காங்கிரஸ் ஆசிரியர் ஆகிய பதவிகளை வகித்து வந்துள்ளார் பூதவுடல் இன்று இராகலைக்கு எடுத்துச்செல்லப்படும் என தெரிய வருகிறது. (ரா)

# சிறில்மத்தியூவைக் காணவில்லை

[கொழும்பு]

பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஜனுதிபதி நேற்று ஆரம்பித்துவைத்த வைபவத்தில் முன்னுள் அமைச்சர் திரு சிறில்மத்தியூ கலந்து கொள்ளவில்லை.

# லொறி கடத்தப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஒட்டுமடத் தடியில் நேற்று மாநகர சபையின் சுகாதாரப் பகுதி லொறி ஒன்று இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டது. (க)

## ஓராண்டு நினைவஞ்சலி
### வித்துவான் சி. ஆறுமுகம்

தோற்றம்: 4-11-1920 மறைவு: 4-3-1984
திதி: 21-2 85


அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், அறிவின்சுடராய், வாழ்வின்வழிகாட்டியாய், குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிவீசிய தந்தையே,

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எங்களைவிடுப் பிரியாது. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேம்.

இன்றைய கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்.
71/6, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (1937)

## 31-ம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம்:
15-10-1938
மறைவு:
22-11-1985

### அலோசியஸ் தர்மலிங்கம்
(சுங்க இலாகா)

இரக்கம் நிறைந்த இறைவா!

எங்கள் உள்ளங்களில் நிறைந்திருந்த அலோசியஸ் தர்மலிங்கத்தை உமது சர்வ வல்லமையும் பொருந்திய அரசில் சேர்த்துக்கொண்டீர். உமது மகிமையை வெளியிட அந்தகாரம் நிறைந்த உலகில் நின்று இவரின் ஆன்மாவை உமது அணைப்பில் இணைத்துக்கொள்ளும். ஆமென்.

இவரின் பிரிவால் துயருறும்.
அன்பு மனைவி, பசமுள்ள பிள்ளைகள், மாமி, சகோதரர்கள், மைத்துனர், மைதுனிகள், உற்ருர், உறவினர்கள், நண்பர்கள். (1914)

# இலங்கை அகதிகளுக்கு செங்கல்பட்டில் மறுவாழ்வு!

[காஞ்சிபுரம்]

இலங்கையிலிருந்து அகதிகளாக இராமேஸ்வரம் வந்திருக்கும் 250 தமிழர்களுக்கு செங்கல்பட்டு மாவட்டத்தில் மறுவாழ்வு அளிக்கப்படவுள்ளது.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் இதனை காஞ்சிபுரத்தில் தெரிவித்தார். இந்த அகதிகள் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருவொற்றியூர், முத்துக்காடு கீழம்பாக்கம் ஆகிய பகுதிகளில் குடியேற்றப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (சூ)

# பலவந்தமானபகிஷ்கரிப்புக்கு இவர்களும் கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

பலவந்தமான பரீட்சைப் பகிஷ்கரிப்புக்களைக் கண்டித்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் (புளொட்) சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

வடபகுதியெங்கும் நேற்றுக் காணப்பட்ட இந்த சுவரொட்டிகளில், 'சுய சிந்தனையில் மலரும் பரீட்சைப் பகிஷ்கரிபுகளே விடுதலைக்குத் தேவை. பலவந்தமான பகிஷ்கரிப்புக்களை (குழப்புதல்) நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்'' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. கீழே தமிழீழ மாணவர் பேரவை என்றும் புளொட் என ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருந்தது.

# சட்டத்தரணிகள் இன்று...

(1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

இக்கூட்டத்தில், யாழ்ப்பாணம், மல்லாகம், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, சட்டத்தரணிகள் சங்கங்களைச் சேர்ந்த சுமார் 60 பேர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டம் கடந்த மாதம் 30ம் தேதி, இம்மாதம் 6ம் தேதி நடந்த கூட்டங்களின் தொடர்கூட்டமாக நடைபெற்றது

கீழ்க்காணும் காரணங்களுக்காக, மீண்டும், வழமைபோல நீதிமன்றம் செல்வதென முடிவாகியது.

பொதுமக்களின் வேண்டுகோளின்படியும், அவர்கள் நன்மையைக்கருதியும், குறிப்பாக தத்துவ, பராமரிப்பு வேலையிழந்தவர், பராயமற்றவர்கள், அவசரதடையுத்தரவுகள் சம்பந்தமான வழக்குகளும் விதவைகளும், இளம் சிறுர்களும் மன்றிலிருந்து யாதாநதம எடுக்க வேண்டிய பணம், எடுபடாமல் கஷ்டங்கள் ஏற்பட்டு வருவதாலும், சட்டத்தரணிகள் ஆஜராகாமல் விட்டாலும் அரசாங்க விதிகளின்படி நீதவான்களை தமது கடமைகளை செய்யும்படி பிரதம நீதியரசரும், நீதிபரிபாலன ஆணைக்குழுவும் சக நீதவான்களுக்கு விசேட பணிப்புரை விதித்தபடியாலும் இதனால் டல குறைவிளக்கததிலுள்ள வழக்குகளை குழம்பவேண்டியநிலை ஏற்பட்டபடியாலும், பொதுவாக ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள் நீதிமன்றங்கள் முதலிய ஸ்தாபனங்கள் எந்த குழப்பநிலை ஏற்பட்டாலும் இயன்றளவு இயங்குவது சமூகத்திற்கும் நன்மை பயக்கும் என்றபடியாலும் நீதிமன்றத்தில் வழக்குப் போல ஆஜராவது என்று தீர்மானிக்கப்பட்டது. (க)

## சட்டத்தரணியை விடுவிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இருவாரங்களுக்குமுன் கடத்தப்பட்ட சட்டத்தரணி எஸ். அமிர்தலிங்கத்தை விடுதலை செய்யுமாறு யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கங்கள் கூட்டாக வேண்டுகோள்விடுத்துள்ளன.

அநதவேண்டுகோளில் சட்டத்தரணி எஸ். அமிர்தலிங்கத்தை தடுத்துவைத்திருப்பவர்கள், இருவாரங்களாக அவரின் பிரிவால் துன்பப்படும் குடும்பத்தாருடன் சேருவதற்கு அவரை விடுதலை செய்யுமாறு சங்கங்கள் ஏகமனதாக வேண்டுகோள் விடுக்கிறத' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க

## இராணுவத்...

(1ம்பக்க 1ம்கலத் தொடர்ச்சி)

வத்தினர் பின்னர் இவரது சடலத்தை வவனியா ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து ஒப்படைத்தனர்.

இவரை விசாரணைக்காக அழைத்துச்சென்ற சமயம் இராணுவத்தினரின் துப்பாக்கியை இவர் பறித்தெடுக்க முனைந்தபோது இராணுவத்தினர் இவரைச் சுட்டுக் கொன்றதாக இராணுவதரப்பில்தெரிவிக்கப்பட்டது.

## வவனியாவில்...

(1ம் பக்கம்8ம்கலத்தொடர்ச்சி)

இப்பிரகாம் எனபவர் மர்மமான முறையில் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

வவனியாவிலுள்ள குளமொன்றுக்குக் குளிக்கச்சென்ற இவர் பின்னர் அங்குள்ள பற்றை ஒன்றினுள் மர்மமான முறையில் இறந்து கிடந்ததாக கூறப்படுகிறது.

இருவரது சடலங்களும் வவனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன. (சூ)

## காங்கேசன்...

(1ம் பக்க 2ம்கலத்தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் காலை 20வயது மதிக்கக்கூடிய இளைஞர் ஒருவரின் சடலம் உணவு இலாகா களஞ்சியப்பகுதி ஓரமாக ஒதுங்கிக்கிடக்கக் காணப்பட்டது.

கழுத்தில் துப்பாக்கிச் சூட்டுக்காயத்துடன் காணப்பட்ட இச்சடலத்தில் உள்ளங்கி மாத்திரம் இருந்தது. கையில் கைக்கடிகாரமும் காணப்பட்டது. (மா)

## எம். ஜி ஆர்...

(1ம் பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

முதலமைச்சரின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில் இந்திய கடல் பிராந்தியத்துக்குள் இந்திய மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பின்மை, மற்றும் அசௌகரியங்கள் பற்றி ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. [ரா]

## இலங்கைய...

[1ம்பக்க 5ம் கலத்தொடர்ச்சி]

சப் பயணிகளாக பிரான்ஸ் வருவதற்கு எவருக்கும் விஸ' வழங்க வேண்டாமென்று கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதுவர் பணிக்கப்பட்டுள்ளார்

## கொள்ளையை...

[1-ம்பக்க5ம்கலத் தொடர்ச்சி]

கதவடைப்புச் செய்வதென்று சங்கம் தீர்மானித்துள்ளது

இந்தக்கதவடைப்புக்கு ஏனைய வர்த்தகஸ்தாபனங்கள், பாவனையாளர்கள், அங்கத்தவர்கள் ஆகியோரின்ஒத்துழைப்பைக் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் பெற்றோல் நிலையத்தில் கடந்த புதன் கிழமை இரவும் 50,000 ரூபா பெறுமதியான பெற்றோல், டீசல் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. தலைமைக்காரியாலயத்திலும் 3 தடவைகள் பாரியகொள்ளைகள் இடம்பெற்றுள்ளன.

இச்சங்கத்தின் பெற்றோல் நிலையத்திலும், கிளைகளிலும் பல தடவைகள் கொள்ளைகள் நடைபெற்றுள்ளன. இத்தகைய கொள்ளைகளினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இச்சங்கமும் தொடர்ந்து இயங்கமுடியாத நிலைக்குள்ளாகியுள்ளது.

இந்தக் கொள்ளைகளைக் கண்டித்தே கதவடைப்பை மேற்கொள்வதென இச்சங்கம் தீர்மானித்துள்ளது.

இச்சங்கத்தின்கீழ் இயங்கும் சுமார் 45 கிளைகளும் நாளை முழுநாளும் மூடப்பட்டிருக்கும். [மா]

# க. பொ. த. (சா/த) பரீட்சை: மாணவர் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை க. பொ. த. [சாதாரண] விசேட பரீட்சை பின்வரும் ஒழுங்கு முறைப்படி நடைபெறுமென்றும் இவற்றை அதிபர்களும், விண்ணப்பித்த எல்லா பரீட்சார்த்திகளும், தங்கள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் வட மாநில கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழி [I-II], கணிதம் (I II) விஞ்ஞானம் [I-II], தட்டெழுத்து, தொழில் நுட்ப கல்வி II ஆகிய பாடங்களுக்கு விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளும் தோற்றவேண்டும்.

ஆங்கிலம் (I-II), சமூககல்வி (I-II), சுகாதாரம் (I-II), சமயம் (I-II), அழகியற்கல்வி (I-II), தொழில்நுட்ப கல்வி-I வர்த்தகமும் கணக்கியலும் (I-II) சுருக்கெழுத்து குழப்பப்பட்ட பரீட்சை நிலையங்களில் தோற்றிய பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும். முறையாக நடைபெற்ற நிலையங்களில் பரீட்சை எடுக்கத்தவறிய பரீட்சார்த்திகளும் இப்பரீட்சையில் தோற்றலாம்.

2ம் மொழி (சிங்களம்-தமிழ்) பாடத்திற்கு பரீட்சைக்குத் தோற்றத்தவறிய பரீட்சார்த்திகள் தோற்றலாம்,

நெடுந்தீவில் அமைந்த இரண்டு பரீட்சை நிலையங்களிலும்' விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளும் சகலபாடங்களுக்கும் தோற்ற வேண்டும். (க)

# பிரசவ வார்ட்டினுள் துப்பாக்கி இளைஞர்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண ஆஸ்பத்திரி பிரசவ வார்ட்டினுள் துப்பாக்கியுடன் நுழைந்த இளைஞர் ஒருவர் சில நிமிடங்கள் அங்கு ரகளை புரிந்தார்.

துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் பெண் ஒருவர் அனுமதிக்கப்பட்டாரராஎன்று கேட்டுக்கொண்டு வார்ட்டினுள் நுழைந்த அந்த இளைஞர் திடீரென துப்பாக்கியைக் காட்டி நோயாளிகளைப் பயமுறுத்தியதாகக் கூறப்படுகிறது

பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்த பெண்கள் மத்தியில் நேற்றுமாலை பதற்றம் நிலவியதைக் காணக் கூடியதாயிருந்தது.

## சர்வகட்சிமாநாட்டு விபரம் நூலுருவில்

(கொழும்பு)

சர்வகட்சி மாநாடு ஆரம்பம் முதல் முடிவு வரையிலான நடைமுறைகள் பொதுமக்கள் பார்வைக்காக நூலுருவில் வெளியிடப்படவுள்ளது.

# நேருக்கு நேர்...

(1ம் பக்க 3ம் கலத் தொடர்ச்சி)

பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை தொடக்கிவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

## தீவிரவாதிகளை எதிர்க்க..

''தீவிரவாதிகளை எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெறுவதற்கு நாட்டின் முழுவளமும் பயன்படுத்தப்படும். அபிவிருத்தியையும் பொருளாதாரத் திட்டங்களையும் நாம் தியாகம் செய்யவேண்டும்.

## எல்லைகளைப் பாதுகாப்போம்

''பருத்தித்துறைமுதல் தெவிநுவரவரையும், மட்டக்களப்பிலிருந்து கொழும்புவரையும் இலங்கையின் எல்லைகளாக இருக்கின்றன. தீவிரவாதிகள் கூறும் தமிழ் ஈழ அரசின் எல்லைகளை அடையும் வரை இலங்கையின் ஏனைய பகுதிகளில் ஊடுருவ தீவிரவாதிகள் முயன்றுவருகின்றனர். எல்லைகளை நாம் சென்றடையாவிட்டால் அந்த எல்லைகள் குறுகிவிடும். அவர்கள் வெற்றி பெறுவதற்கு முன்னர் நாம் செயல்பட எண்ணியுள்ளோம்.

''தாக்கிவிட்டு மறைந்துவிடும் தந்திரத்தை தீவிரவாதிகள் மாற்றப்போவதாக தகவல் கிடைத்துள்ளது. மூன்று இயக்கங்கள் ஒன்ருக இணைந்துவிட்டன. நேருக்கு நேர் மோதலுக்கான பொது இராணுவத் திட்டமொன்றுக்கு இவை இணங்கியுள்ளன.

## தீவிரவாதிகளை இணைக்க முயற்சி

''தீவிரவாதக் குழுக்களை பொதுத் திட்டத்தின் கீழ் ஒன்றிணைப்பதற்கு தென்னிந்தியாவில் அதிகாரத்திலிருப்பவர்கள் சிலர் ஈடுபட்டிருப்பதற்கு சான்றுகள் உள்ளன.

''நேருக்கு நேர் மோதலுக்கான இறுதி ஆயத்தங்கள் செய்யப்பட்டுவருகின்றன. அவர்கள் இதனை உக்கிரமான போராகவே கருதுகின்றனர்.

''பிரிவினைக்குத் தீர்வு காண்பதன் மூலம் பயங்கரவாதம் தீர்ந்துவிடும் என்று ஒருசிலர் நம்புகிருர்கள். ஆனல் பயங்கரவாதத்தை அழிக்காமல் தீர்வுகாண முடியாதுஎன்று மற்ருெரு சாரார் கருதுகின்றனர். இரண்டாவது சர்ரார் கருதுவதே சரியானதென்று நானும் நம்புகிறேன்.

## 139 ராணுவம் 339 மக்கள் பலி

''1983ஜுலை முதல் 85 ஜனவரி 15ம் திகதிவரை பொலிசாரும் ராணுவத்தினருமாக 139 பேரும் 339 பொதுமக்களும் கொல்லப்பட்டனர். திருமலை பட்டிருப்புக்கு விரைவில் இடைத்தேர்தல் நடத்தப்படும்.

## இந்தியாவில் தீவிரவாதிகள் பயிற்சி

''இந்தியாவிலுள்ள பயிற்சி முகாம்களில் தீவிரவாதிகள் பயிற்சி பெற்று வருகிருர்கள் என்பதற்கு ஆதாரம் உண்டென்பது பற்றி இந்திய அரசுக்கு பல தடவை முறையிட்டு வருகிறோம். இந்த இயக்கங்களின் தலைவர்கள் இந்தியாவில் வாழ்ந்து அங்கே சந்தித்து சட்டவிரோதமான நடவடிக்கைகளை செய்து வருகின்றனர்.

''இந்திய முகாம்களில் தீவிரவாதிகள் பயிற்சி பெறுவதையும் அங்கிருந்து ஆயுதங்களுடன் வருகிருர்கள் என்பதையும் இந்திய அரசு மறுத்துள்ளது இந்திய மண்ணிலிருந்து ஊடுருவலைத் தடுப்பதற்கு கூட்டுக்காவலுக்கு யோசனை கூறியுள்ளோம். அகதிகள் அங்கு செல்வதையும் தடுக்கக் கூடியதாக இருக்கும். இதற்கு இந்தியா ஏன் ஆட்சேபிக்கவேண்டும்'',

# 16 வயது பூர்த்தியான மாணவர்க்கே தேசிய அடையாளஅட்டை!

(யாழ்ப்பாணம்)

கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு இனிமேல் தேசிய அடையாள அட்டை பதினறு வயது பூர்த்தியானவர்களுக்கே வழங்கப்படும்.

இதுவரை காலமும், க. பொ. த. [சாதாரணம்] க. பொ. த. [உயர்தரம்] வகுப்பு மாணவர்கள் 16 வயதிற்குக் குறைவாக இருந்தாலும், அவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டது. மாணவர்களுக்கு இருந்துவந்த இச்சலுகை நீக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் சகல ஆட்பதிவு திணைக்கள கிளைகளுக்கும் அறிவித்ததைத் தொடர்ந்து ஆட்பதிவு கிளை நிர்வாக உத்தியோகத்தர், கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். தேசிய அடையாள அட்டை இனிமேல் 16 வயதை பூர்த்தியானவர்களுக்கு தவிர பரீட்சைக்குத் தோற்றும் தேவையை பூர்த்திசெய்யும் நோக்கத்திற்கு மாத்திரமல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eeelanadu 100236/81 Eelanadu P. O Box 49, Telegram Tle phone um 22nber389-24126.